1986 மே 8]

மணலி இந்தியன் ஆர்க்கானிக் கெமிக்கல்ஸ் ஆலையிலிருந்து வெளிவரும் வாயு.

711—(*வினா எண் 4211) திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணலியில் உள்ள இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் என்ற இரசாயன இழை தயாரிக்கும் ஆலையில் இருந்து வெளிப்படும் வாயுவினால் உடல் நலம் பாதிக்கப்படுவது குறித்து அரசுக்கு புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மணலியில் உள்ள இந்தியன் ஆர்க்கானிக் கெமிக்கல்ஸ் என்ற இரசாயன இழை தயாரிக்கும் ஆலையில் இருந்து வெளிப்படும் வாயுவினால் உடல் நலம் பாதிக்கப்படுவதாக புகார் எதுவும் இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புகார்களை மணலியில் உள்ளவர்கள் அளித்திருக்கிறார்கள். அரசுக்கு வரவில்லை என்று அமைச்சர் பெருமான் குறிப்பிடுகிறார்கள். இருந்தாலும் இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸிலிருந்து அசெட்டிலின் என்ற நச்சு தன்மை பொருந்திய வாயு, தண்ணீரில் கலக்கப்பட்டு அப்பகுதியில் உள்ள தண்ணீர் பாழாக்கப்படுகின்றது. விவசாய நிலங்கள் பாழாக்கப்படுகின்றன. ஏற்கனவே பேரவையில் இதைப் பற்றி நான் குறிப்பிட்டேன். அங்கே கெமிக்கல்ஸ் கம்பெனிகள் நிறைய இருக்கின்றன. கோத்தாரி, எம். ஆர். எப். பெர்ட்டிலைசர் போன்ற தொழிற்சாலைகள் வெளியிடுகின்ற தண்ணீர் அந்தப் பகுதி நிலங்களை பாழாக்குகின்றன. எனவே பொல்யூஷன் கன்ட்ரோல் துறையின் பிரிவு ஒன்றை அநதப் பகுதியிலே அமைத்து அந்த பகுதியினுடைய நல்வாழ்விற்கு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல வாய்ப்பினை அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இல்லையென்றால் அது

போபாலாக மாறிவிடும் என்ற எச்சரிக்கையை அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே ஒரு நல்ல நிலையை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இண்டஸ்ட்ரீஸ் பொறுத்த வரையில் இது 1972 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு தொழிற்சாலையாகும். இதிலே 1,000 டன் ஒரு மாதத்திற்கு பாலிஸ்டர் பைபர்ஸ், 300 டன் மெத்தனால் தயாரிக்கப்படுகின்றன.
'The sources of emission are the gases emitted from three boilers, emissions from the heat transfer liquid heating section and the dust emission from the chips cutting section.'
ஆகவே இந்த பகுதியிலே மேலே ஆகாயத்திலே ஒரு பைப் மூலமாக அவைகளையெல்லாம் விடுகிறார்கள். ஆகவே நாம் ஒரு நோட்டீஸ் கொடுத்து உடனடியாக கன்சன்ட் அதாவது அனுமதி வாங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதுபோல் அவர்கள் கன்சன்ட் அப்ளிகேஷன் போட்டார்கள். 4-7-1985 அன்று சில நிபந்தனைகளுக்குட்பட்டு பிறகு இந்த அனுமதி கொடுத்திருக்கிறோம். இதில் முக்கியமான ஒரு நிபந்தனை இருக்கிறது. அது
'subject to the condition that the Industry shall achieve the ambient air quality standards as prescribed by the Board'
நம்முடைய போர்டு என்ன தகுதி இருக்க வேண்டும் என்று சொல்கிறதோ
'ambient air quality standards'
அதற்கு பிறகுதான் நாம் அனுமதி கொடுக்கின்றோம் என்று 4-7-85 அன்று அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறோம்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருந்தகை அவர்கள் சிறப்பான செயல்களை குறிப்பிட்டிருந்தாலும்கூட புதியதாக அந்தப் பகுதியிலே ஒரு அனெக்ஸ் கட்டியிருக்கிறார்கள். அசெட்டிலின் வெளியிடுகின்ற அதிகமான புகையினால் புகையை அந்தப் பகுதி மக்கள் சுவாசிக்கின்ற சூழ்நிலையினால் அவர்களுக்கு ஆஸ்த்துமா போன்ற வியாதிகள் ஏற்படுவதை தாங்கள் அறிவீர்கள். அது

1986 மே 8]

தடுக்கப்படுமா? தொழிலாளர் வர்க்கங்கள் 58 ஆண்டுகள் உழைக்க வேண்டியவர்கள் 45 ஆண்டுக்குள் ஓய்வு பெறுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. இதை முன் அறிவிப்பாக வைத்து அந்த இயக்குநர்களை கடுமையாக விசாரித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே இன்னொரு குறிப்பை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

'The industry has provided stacks of 27.0 metres. . . '
27 மீட்டர் உயரம் இருக்கக்கூடிய அந்த ஃபுனல் மூலமாக அவர்கள் அந்த காஸை வெளியே விடுகிறார்கள்.

'The industry has provided stacks of 27.0 metres height above ground level for the release of blue gas emissions from each of the three boilers. Three stacks each of 27.0 metres height have also been provided in the heat transfer liquid heating unit to discharge the emissions. Bag filters have been installed in the chips cutting section to control the dust emission.'
இவைகளையெல்லாம் சொல்லியிருக்கிறோம். இன்னும் இவை போதாது என்று நாங்கள் நிபந்தனை விதித்திருக்கிறோம். நாம் இந்தஇந்த கண்டிஷன்ஸ் நீங்கள் செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

'If you don't satisfy the following conditions we will be taking action'. . .
என்று சொல்லியிருக்கிறோம். இந்த நிபந்தனையை நீங்கள் செய்யவில்லை என்றால் நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம் என்று சொல்லியிருக்கிறோம். இன்னும் 3, 4 மாதம் அவகாசம் கொடுத்து, இந்த நிபந்தனைக்கு உட்பட்டு அவர்கள் செயல்படவில்லையென்றால் நாம் அந்த ஃபேக்டரியை மூடவேண்டிய ஒரு நிர்பந்தத்திற்கு தள்ளப்படுகிறோம்.